ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2 / 1610 / 2020, நாள் 28.02.2020-ன்படி தனியர், ஈரோடு. வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக (பிஅ) 05.03.2020 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும், தனியரின் பணியினை 05.03.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இந்நிலையில், வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிஅ) பணி நியமனம் செய்யப்பட்ட திரு M.R. முகமது ரஜாக் என்பவரின் பணியினை 05.03.2020 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், இளநிலை உதவியாளராகப் (பிஅ) பணி நியமனம் செய்யப்பட்ட திரு M.R. முகமது ரஜாக் அவர்களின் பணி 05.03.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், தனியர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஆண்டு ஊதிய உயர்வுக்குத் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ. சா. எண் 21296 / க்யூ.1 / 2020-1, நாள் 28.12.2020 மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ. சா. எண் 35789 / ஜி1 / 2020-1, நாள் 08.01.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5(இ).
திரு M.R. முகமது ரஜாக், இளநிலை உதவியாளர் (பிஅ),
வழி: வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண் 22537 / வேறி9 / 2020
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

வ. சசிகுமார் 29/1/21
பிரிவு அலுவலர்
29/01/21

Scanned by CamScanner

**சுருக்கம்**

பணியமைப்பு – வேளாண்மைத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு M.R. முகமது ரஜாக் என்பவரின் பணியினை 05.03.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை (வேநி9) துறை**

அரசாணை (3டி) எண் 20

நாள்: 27.01.2021
சார்வரி வருடம்,
தை திங்கள் 14,
திருவள்ளுவர் ஆண்டு 2052

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண் 165, வேளாண்மை (வேநி9)த் துறை, நாள் 08.08.2019.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி2 / 53722 / 2020, நாள் 23.11.2020.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திரு ஜி. என். முகமது ரபி என்பவர் உதவி வேளாண்மை அலுவலராக ஈரோடு தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்தபோது 29.11.2010 அன்று பணிக்காலத்தில் காலமானதால், அவரின் மனைவி திருமதி எஸ். மசூதா பானு என்பவர் தனது மகன் திரு எம்.ஆர் முகமது ரஜாக் என்பவருக்கு அரசு ஊழியர் இறந்து மூன்றாண்டுகளுக்குள் 14.07.2011 அன்று கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பித்த போது, விண்ணப்ப நாளில், தனியர் 18 வயதினை நிறைவு செய்யாததால் அரசாணை (நிலை) எண் 155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 10.12.2014–க்கு தனியர் பொருட்டு விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20(6)(b)–ஐ தளர்வு செய்தும், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரிய விண்ணப்ப நாளில் தனியர் பெற்றுள்ள கல்வித் தகுதியின் அடிப்படையில் தனியருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஈரோடு தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்தபோது 29.11.2010 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த திரு ஜி. என். முகமது ரபி என்பவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது மகன் திரு M.R. முகமது ரஜாக் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களைப் பரிசீலித்து வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 61183 / 2018, நாள் 07.02.2020–ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிஅ) பணி நியமனம் செய்து, ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து

Scanned by CamScanner